# EASTER BAJANAI

UNIVERSITY OF JAFFNA LIBRARY 10 AUG 2000 PERIODICALS DIVISION

A Large gathering witnessed an Easter Bajanai held at Christa Seva Asram, Chunnakam, on Easter day 23rd April at 3. 00 p. m. The Bajanai was organized by the Music committee of Jaffna Diocese of the Church of South India.

Girls of Ilayathamby Girls Home and Arulagam formed the Choir. Ms. Clara Arulanantham of Uduvil Girls' College, directed the Choir. Some of the Songs sung at the bajanai were composed by Ms. Clara Arulanantham and Mr. M M. Rodrigo.

The message of the Bajanai was that the Creater God became human, Suffered for us and died on the cross The third day Chirst rose again and gave us new life.

The Bajanai was followed by a drama staged by the youth of Vaddukoddai The Drama "Thirantha Kallarai" (Opened Sepulchre) is a translation of 'The Vigil' It was a Court scene where arguments were put forward in favour of and against the nesurrection. Some of the witnesses 'tried to establish the fact that the owner of the land was guilty of hiding the body of Christ some where in the garden but failed to establish the fact. Other witnesses like Mary Magdalene claimed they saw the risen Lord but no independent sources claimed seeing the risen Christ.

The climax was Saul (Paul) who first testified that Christ could not have risen, basing his argument on Rabinical understanding, re - appeared in front of the bench claiming that he had seen the risen Lord on his way to Damasues

The judge concluded 'The fact is that no independent sources have claimed to have seen this risen Jesus. On the other hand there are no eye withnesses to say that they have seen the farmer stealing or burying the body. The dead body could not be found anywhere within the vicinity therfore ... ..."

The drama was directed by Mr. A. C. Francis of Jaffna College.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 160 Jaffna Friday 5th, May 2000 No. 09

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


## REV. S. M JACOB

Swaminathan Macilamany Jacob was born on8 -7-26 at Nagar Koril in South India. He was the only son of a teacher, Paul S. Jacob, after six daughters. The family moved to Sri Lanka where his father became a dedicated Evangelist in the Hill Country.

Rajah Jacob as hs wae called then, and now, by friends; had his early education at Holy Cross School, Kalutura, Highlands College, Hatten and at Wesley College, Colombo. He had offered Sinhalese as his second language in school. This had in later life proven to be a great asset to his ministry in the church across the entire island of Sri Lanka.

1951 - 1975. After his B. D. at the United Theological College in 1951, he served in the Colombo South circuit, (a predominantly Sinhaless area), and in Hatton, where he married Joyce in October 1955. He moved onto the Eastern Province where his children Shanthakumar (1956) and Shanthini (1958) were born.

He obtained his M. Th. at the Chicago Theological Seminary in 1965 and returned to Sri Lanka and served the Methodist Church in many circuits in Colombo. the Eastern Province, the Northern Province and in the Central Province.

Whereever he served he left his stamp of faith on the people he served and his skill as adminisrator on the outreach of the church. When in Kottaimunai. he helped build a new Manse, a new Church Hall and made plans for an Eastern Technical Institute, a joint venture with the Jesuits to provide vocational training for young men He was Secretary of the Methodist Conference in Sri Lanka, while in charge of the Tamil Methodist circuit in Moor Road, Colombo from 1972to 1975 when he was invited to come to Britain as part of the World Church in Britain Program.

(Contd to Page 4)

## Petrol & Kerosine in Black Market

Petrol and Kerosine are in Short Supply in Jaffna: This has rosulted in unscrupulous traders hoarding and selling Petrol & Kerosine at exorbitant prices. A Litre of Petrol is Sold at Rs 200/-

## Tigers Capture Pallai.

The Tigers who captured Eliphant Pass and Iyakkaichch have now captured Pallai also

## A Birthday wish from C. T. S.

It is the most natural thing for us at the Christian Theological Seminary to congratulate Bishop S. Jebanesan on his 60 th birthday, because he is one of us. He is our Principal, but he also teaches our students as a Professor of Church History. He often goes out of his way to take these classes and comes roaring into our campus on the back of a much . travelled motorcycle at the hottest time of the day. Because of his love for the Tamil language we can always count on his stimulating interest and support for programs like the Krishnapillai anniversary celebrations His interest in publications stimalates us to produce our Seminary magazine Iraiiyal Kalanjiam, Our library is never far away from his thoughts and rarely does he come baek from a Synod meeting in India without bringing some new theological books for the library. We may, therefore, say that he is truly part and parcel of our life as a seminary in many ways. And still that is not all, because he is not only interested in our programs and activities. but also He takes a personal interest in us as teachers and students.

Therefore, for all the love he has showered on our institution as well as on us as a community, we thank him. May the Lord bless him on this his 60 th birthday and continue to guide and strengthen him in his many responsibilities in these disturbing times.

C . B. Bavinck
Deputy Principal


## SUBSCRIPTION

Life (Local) Rs 1000/-

Annual (Local) Rs 100/

Forein (Annual) US $ 15/-

or equivalent. Life subscribers living abroad can receive their copies of Morning Star by paying postage.

A/C No 16400760 - 01
Commercial Bank
Colombo - 06
Contact:

1 Mr. N S P Thampoe
39, Fussells Lane
Colombo, Sri Lanka.

2 Manager.
Morning Star, Diocesan Office, Vaddukoddai.


## No Contact with Outside world.

Jaffna is virtually cut off from rest of the world.

The flights to Jaffna which were suspended when war broke out have not been resumed.

The Sea - transport which all hopred for has not started yet All those who have to go South to transact business and to attend to urgent personal matters are disapointed.

Even the telephone lines are cut off and people in Jaffna are unable to contact relatives, friends and business colleagues in the rest of the world.

# மாணச் செய்திகள்

**(திருமதி. மலர்ராணி பாலசிங்கம்)**

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் வசித்தவருமாகிய திருமதி மலர்ராணி பாலசிங்கம் (09-04 -2000)ஞாயிற்றுக் கிழமை அன்று மறுமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னார் பாலசிங்கம் (மின்சாரசபை) அவர்களின் அன்பு மனைவியும் ஏஞ்சல் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) தேவபாலன் றூபி (இந்துக் கல்லூரி சாவச்சேரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற அல்வாய் சின்னத் தம்பி மாஸ்ரர், திருமதி செபமணி சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மகளும் ஆவார் அன்னாரது நல்லடக்க ஆராதனை நுணவிலிலும் அல்வாயிலும் நடத்தப் பட்டது. நுணாவிலில் வண V. N தர்மகுலசிங்கம் வண. T தேவநேசன் வண. P J சூரியகுமாருக்கு உதவியாக ஆராதனையில் பங்கு பற்றினர். அல்வாயில் வண. சதீஸ் அருள் சகோதரி இரத்தினசிங்கம் வண. வசந்தகுமார் ஆகியோரால் நடத்தப்பட்டது. திருமதி இராசரத்தினம் அவர்கள் இரங்கலுரை வழங்கினார்.

❋ ❋ ❋

**(திருமதி ஜெயலட்சுமி பீடில்)**

சாவகச்சேரியை சேர்ந்த திருமதி ஜெயலட்சுமி பீடில் 13 - 04 - 2000 வியாழக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற நவசிவாயம் பீடிலின் அன்பு மனைவியும் நவரஞ்சினி, ஜெயரஞ்சன் ராஜகுமார் ரதினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெயமணி கிருபைநாயகம், அன்னலட்சுமி எவேட்ஸ் காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், தனபாலசிங்கம், குலராஜசிங்கம், பரராஜசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சனி 14 - 04 2000 வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் வண T. H வசந்தகுமார் வண P. J சூரியகுமார் ஆகியோரால் நடாத்தப்பெற்று மட்டுவிலில் உள்ள சேம காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

❋ ❋ ❋

**டானியல் இராசையா பூரணசற்குணம்**

டானியல் இராசையா பூரண சற்குணம் அவர்கள் அமெரிக்காவில் காலமானார். அவர் காலம் சென்ற திரு திருமதி P E இராசையா தம்பதிகளின் அன்பு மகனும் கிறேஸ் கருணா தேவியின் அன்புக் கணவரும் கிறிஸ்ரின் பிறேமினி (Nuilaya) சாள்ஸ் தேவதாயலன் (Singapuar) பேராசிரியர் அலெக்ஸ் தேவரஞ்சன் (Syracuse) USA) Dr மேர்சி மதினி (Canada) சாமுவேல் தேவநேசன் Camen Island) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெயகுமார் தன்யுலா, றஞ்சனா நொயல்சபா, தர்சினி, ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவின் விஜினி, ஜவன் நவீன், இர்வின் வினோத் சரோன் விவேக், சமன்தா ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி அற்புதராணி நடராஜா காலஞ்சென்ற R D தனபால சிங்கம் RC ராஜேந்திரம் D R R செல்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 29 - 04 - 2000 (சனிக் கிழமை) கனடாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

❋ ❋ ❋

# கருத்தரங்கு

ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு வைத்தியசாலை வீதியிலுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவில் 06-5-2000 சனிக்கிழமை சமயக்கல்விக் குழுவின் தலைவர் அருட்திரு A A போல் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெறும்.

## வாழ்த்துகின்றோம்

கிறிஸ்துவின் திருப்பணியில் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருள்திரு டீ. ஆர். அம்பலவாணர் அவர்களையும் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருள்திரு V. N. தர்மகுலசிங்கம் அருள்திரு S ஜெயநேசன் அருள்திரு A ஜெயகுமாரன் ஆகியோரையும் 10 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருட்திரு மில்ரன் சொலமன் அவர்களையும், தொடர்ந்து பல ஆண்டுகள் வாழ்ந்து இறைபணியில் நற்பணியாற்ற வேண்டுமென உதயதாரகை மனமார வாழ்த்துகின்றது.

# ஆராதனை

தெல்லிப்பளைத் திருச்சபை மக்கள் அனைவரும் உயிர்த்தெழுதல் ஞாயிறன்று தங்களது சொந்த ஆலயம் சென்றார்கள். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஆலயத்தில் 2000 ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் உயிர்ப்பு திருநாள் வழிபாட்டினை வைபதற்கு இராணுவத்தினரின் அனுமதி பெற்று மிகவும் சிறப்பாக ஆராதனையை நடாத்தினார்கள்.

ஆலயத்தின் முன் வாசலிலிருந்து சபையார் யாவரும் மெழுகு வர்த்திப் பவனியுடன், ஆலயத்திற்குள் சென்று திருவிருந்து வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். சேகரக் குரு வண. மில்டன் தலைமையில் சபைக்குரு வண. (செல்வி) டெய்சி ஆசீர்வாதம், வண. தேவகுணானந்தன் ஆகியோரால் வழிபாடு நடாத்தப்பட்டது. சேகர குரு வண. மில்டன் சொலமன் 'இறை செய்தியை'' ஆற்றினார் அதனைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் சிரார்த்த தினத்தை நினைவு கூர்ந்து. திரு S. R இயேசுபாலன் ஐந்து நிமிடங்கள் ''இரங்கலுரையை'' ஆற்றினார். இவ் வழிபாட்டில் 85 பேர் மட்டில் கலந்து கொண்டார்கள்.

## சேவை தொடரட்டும்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் திருமண்டலப் பேராயர் அதிவண. கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களது 60 ஆவது அகவையடைவதையிட்டு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் பாரம்பரியத்தைப் பேணுவதற்கு உறுதுணையாக இருக்கும் பேராயர் அவர்கள் கல்லூரி ஆளுநர் சபையின் தலைவராகவும் இருந்து வழிப்படுத்தியுள்ளார்.

ஆடம்பரமான விழாக்களை எடுப்பதை விரும்பாத பேராயர் அவர்கள் நலிவுற்று நொந்து போய் இருக்கும் வன்னிப் பெருமக்களோடு தனது 60 ஆவது அகவைப் பூர்த்தியைக் களித்த அவரின் சமூகமனப்பாங்கை எடுத்துக்காட்டுகின்றது. அவர் நீடூழி வாழ்ந்து அவரது சேவை மக்களுக்குக் கிடைக்க இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

ஏ. ஏ. போல்
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி
செயளாளர் தெ. இ. திருச்சபை

# இறைஆசி கிடைக்குக!

அறுபதாவது அகவைக்குள் பிரவேசிக்கும் எமது திருச்சபையின் பேராயரும் எமது கல்லூரியின் அதி முதல்வராகவும் விளங்கும் வண. கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களை உடுவில் மகளிர் கல்லூரியின் சார்பில் எல்லா நலத்துடனும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பேராயருக்கு நல்ல பலத்தையும் சுகத்தையும் கொடுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்புடன் அவரின் பணிகள் சிறப்புடன் தொடர இறைஆசி வேண்டி நிற்கின்றோம்.

கலாநிதி சி. வி. செல்லையா
அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி

## விளையாட்டுப் போட்டி

கடந்த 07 - 04 - 2000 அன்று உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு விளையாட்டுப் போட்டி பிரதம விருந்தினரான திருமதி ரெஜினா இருதயநாதன (பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமக் கோட்ட) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. 500க்கும் மேற்பட்ட பிள்ளைகள் கலந்து கொண்ட இப்போட்டியில் பெற்றோர், நண்பர்கள், நலன்விரும்பிகள், ஏராளமாகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். இறுதியில் பிரதம விருந்தினர் அவர்களால் வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

## உயிர்ப்பின் பஜனை நாடகம்

உயிர்ப்பின் பஜனையும் நாடகமும் 23 - 04 - 2000 உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3 - 00 மணிக்கு ஆசிரம பெரியண்ணன் மண்டபத்தில் இடம்பெற்றது. முதலில் பாடகர் குழுவினரின் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பமானது. யாழ். கல்லூரியின் அதிபரும் சமயக் கல்விக் குழுவின் தலைவருமான அருட்திரு A போல் அவர்களின் அழைப்பு ஜெபத்துடன் தொடர்ந்து பல்வேறு பாடல்கள் பாடகர் குழுவினரால் பாடப்பட்டது. அருட்திரு P J சூரியகுமார் ஜெபம் செய்து ஆசீர்வாதம் வழங்கினார். தொடர்ந்து தென் இந்திய திருச்சபை வாலிபர்களால் ''திறந்த கல்லறை'' என்னும் நாடகம் மேடை யேற்றப்பட்டது. இந்நாடகத்தை திரு A. C பிரான்சிஸ் நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகம் பலரையும் கவர்ந்து பாராட்டுக்கு உள்ளானது.

# இறைபணியில் 50 ஆண்டுகள்

## வண. தானியேல் இராசரத்தினம் அம்பலவாணர்

(B. A, M. A, B D,)

கண்களில் மனதில் அன்புக் காணிக்கை நிறையக் கொண்டு
பண்பொடு பணிவு நேர்மை பாடுபட்(டு) உயர்வு காணும்
திண்ணிய நெஞ்சத் தோடும் சிறந்த நல் அறிவினோடும்
எங்களின் வழிநன்றாக இயங்கினீர்! வாழ்த்துகின்றோம்.

கடல் கடந்(து) இனிய கல்விக் கலை பயின்(று) உயர்வு கண்டீர்
குருவென வந்தீர் எங்கள் குறை களைந்(து) இனிய செய்தீர்
மொழி பெயர்த்(து உயர்ந்த நோக்கில் முழு உல(கு)
அறியுந் தன்மை
வழங்கினீர் ஐயா; உங்கள் வளர்ச்சியைப் போற்றுகின்றோம்.

ஏழையின் சிரிப்பில் உண்மை இறைவனைக் காணுகின்ற
தூய நல் ஆத்ம ஞானத் துணையொடு - பரந்த நோக்கில்
வாழ்வுறு மனிதம் எங்கும் மலர்ந்திடப் பணி செய்கின்ற
மாண்புறு ஆற்றல் வாய்ந்தோம்! மகிழ்வொடு
வாழ்த்துகின்றோம்.

ஈழத்தின் எழிற் தீவுங்கள் இறையியல் ஒளியைத் தூண்ட
வாழ்வுசெய் வட்டுர்க் கல்வி வளத்தொடு மேலும் தேடி
ஓய்வென எண்ணா(து) எங்கள் உயர்வினில் பங்கு கொண்ட
தாய் நிறை அன்பிற்காகத தந்தையே! வாழ்த்துகின்றோம்.

இறையியற் கல்லூரிக் குடும்பம்

## திறந்த கல்லறை

"அவர் இங்கே இல்லை அவருடைய கல்லறை திறந்து கிடக்கிறது" இயேசுவின் கல்லறை திறந்தபடி இருத்தல் உலக வரலாற்றில் நடைபெற்ற சிறப்பான நிகழ்ச்சி நமது விசுவாசம், வழிபாடு, திருப்பணி, கிறிஸ்தவ சமயம். அனைத்திற்கும் ஆதாரம், இது வாகும். இது இயேசு இன்றும் உயிருள்ளவராக எங்கும் பிரசன்னமாகயிருப்பதை வலியுறுத்துகிறது.

சாது சுந்தர்சிங் தமது நண்பர் முகமது நபியின் கல்லறையைப்பார்த்து விட்டுத் திரும்பிய பின் கூறியது "நபியடிகளின் கல்லறை வைரக்கற்களினால் நன்கு அலங்கரிக்கப்பட்டு அழகுப்படுத்தப்பட்டுள்ளது. அவரது எழும்புகள் இங்கே இருக்கின்றன" இந்த நண்பர் பிரான்ஸ் நாட்டிலுள்ள மாவீரன் நெப்போலியனின் கல்லறையைப் பார்க்கச் சென்றபோது "நெப்போலியனின் கல்லறை இங்கே இருக்கிறது" என்று கூறப்பட்டது. அந்த நண்பர் பரிசுத்த பூமியாகிய பாலஸ்தீனா நாட்டிற்குச் சென்று எருசலேமிலுள்ள இயேசுவின் கல்லறையைப் பார்க்கச் சென்றார். மற்ற இரு தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட்டது போல் இங்கு ஒன்றும் கூறப்படவில்லை அவர் அங்கே இல்லை "கல்லறை திறந்து கிடக்கிறது"

இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்த பின் தமது சீடர்களுக்கும் அடியார்களுக்கும் பன்னிருமுறை தம்மை வெளிப்படுத்தி அவர்களைத் தைரியப்படுத்தி அவர்களுக்கு ஆறுதலும் உற்சாக மூட்டும் வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்தினார். இயேசுநாதர் முதன் முறையாக மகதலேனா மரியாளுக்குத் தரிசனம் கொடுத்தார். நான் உயிர்த்தெழுந்த நற்செய்தியை "என் சகோதரர்களிடம் போய் அறிவி" என்று கட்டளையிட்டார். அழுது கொண்டிருந்த மரியாள் இயேசுவைக் கண்டு அகமகிழ்ந்தாள்.

கல்லறையிலிருந்து எழுந்த ஆண்டவர் கூறின இரண்டாவது வார்த்தை "உங்களுக்கு சமாதானம்" என்பதாகும். சீடர்கள் மிகவும் பயந்து தங்களுக்கும் ஆபத்து வரும் என்று கலங்கி ஒளிந்து கொண்டிருந்தனர். இவ்வாறு பயந்து கொண்டிருந்த சீடர்களுக்குத் தரிசனமாகி ஆண்டவர் கொடுத்த செய்தி, "உங்களுக்குச் சமாதானம்" என்பதாகும் நாமும் கவலையுடன் கலக்கமடைந்து காணப்படுகிற சமயத்தில் ஆண்டவர் தரிசமமாகி "உங்களுக்குச் சமாதானம்" என்கிறார்.

கல்லறையிலிருந்து எழுந்த ஆண்டவர் கூறின மூன்றாவது வார்த்தை 'பயப்படாதிருங்கள்' என்பதாகும் பயப்படாதிருங்கள் என்றால் "இனிப்பயம் வேண்டாம்" என்றும் பொருள்படும். இன்றைய தமிழ் மக்களுக்கு மனுக்குலத்திற்கு நமக்குத் தேவையான செய்தி. இதுவே யாகும். பல்வேறு பிரச்சினைகளால் பயப்படுவோரை பார்த்து பயப்படாதிருங்கள் என்கிறார். பயப்படுகிறவர்களுக்கு உள்ளத்தில் அமைதல் இல்லை. பயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இயேசு சொல்லும் செய்தி, பயப்படாதிருங்கள் என்பதாகும்.

இயேசுவின் கல்லறை திறந்துகிடக்கிறது. கல்லறையிலிருந்து எழுந்த ஆண்டவர் கூறின திருவார்த்தைகள் நமக்கு ஆறுதலும் உற்சாகமும் ஊக்கமும் தரும் வார்த்தைகளாகும்.

எஸ். ஜே. எழுதுவது

# வன்னி நினைவுகள் 3

## திடப்படுத்தல் ஆராதனைகள்

26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாம் என்ன செய்ய வேண்டும் என்று குரு முதல்வர் ஞானப்பிரகாசத்தை கேட்டேன் காலையில் ஜெயபுரத்தில் பழய தருமபுரத்தில் ஆராதனை நடத்வீர்கள் அதற்குப் பின்னர் கிளிநொச்சி சென்று இடிபாடுகளை பார்ப்பீர்கள் அதனைத் தொடர்ந்து வட்டக்கச்சி பகல் பராமரிப்பு நிலையத்தில் உங்களுக்கு மதிய போசனத்தின் பின்னர் விசுவமடுவில் ஒரு திடப்படுத்தல் ஆராதனை என்றார்.

கிளிநொச்சியில் கனகாம்பிகை குளத்தில் நீங்கள் குளிக்கலாம் அதற்குரிய உடைகளையும் கொண்டு வாருங்கள் என்று திரு எஸ் இரத்தினவேல் கடலிலும் குளத்திலும் குளிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும் என்பது அவருக்குத் தெரியும். அன்று, காலை 8 00 மணிக்கு ஜெயபுரம் ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனை ஆரம்பமாகியது. இலங்கை நேரம் 8 30 மணி பெருந்தொகை மக்கள் ஜெயபுர ஆலய வளவில் கூடியிருந்தனர். கருணா நிலையப் பிள்ளைகள் எல்லோரும் உற்சாகமாக வழிபாட்டில் கலந்து கொண்டனர். 16 பிள்ளைகள் திடப்படுத்தல் பெறுவதற்கு ப ப் பட்டிருந்தனர் அவர்கள் பவனியில் முன் செல்ல பின்னே மத குருமார் பவனி சென்றனர். கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. குரு முதல்வர் ஞானப்பிரகாசம் வழிபாட்டைத் தொடங்கினார். பின்னர் 16 திடப்படுத்தல் ஆபேட்சர்களை பேராயர் முன் நிறுத்தினார். வேதப்பாடங்களை கருணா நிலைய மேற்பார்வையாளர் Gdladys அவர்களும் இறையியற் கல்லூரி மாணவன் அ அசோகன் அவர்களும் சபைக்குரு வே. பத்மதயாளன் அவர்களும் வாசித்தனர் அங்கிருந்த மக்கள் கூட்டத்தின் அளவு தென் இந்தியாவில் உள்ள தேவாலயங்களில் ஞாயிறு ஆராதனையை ஞாபகம் ஊ .

வழிபாட்டைத் தொடர்ந்து அனைவருக்கும் சர்க்கரைப்பொங்கல் பரி றப்பட்டது. சரி இனி கிளிநொச்சிக்குப் புறப்படுவோம். என்று துரிதப் படுத்தினர். திரு எஸ் இரத்தினவேல் மாமாவின் வானில் வண. அ ஜெயக்குமார் வண E P சொலமன் வண J ஞானப்பிரகாசம் வண. P அனுகூலன் வண. பீ மதியாபரணம் திரு. சுரேஸ் தம்பு திரு. எஸ் இரத்தினவேல் ஆகியோர் பேராயருடன் புறப்பட்டனர்.

முதலில் கோணாவிலை பார்வையிட்டோம். அது மிகவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் ஊழியன் வண ஜோன் செல்வம் ஊழியத்தை மிகவும் கவனமாக செய்து வருகின்றார். அதற்குப் பின்னர் சலோம் நகர் பண்ணையை பார்வையிட்டோம். கட்டடங்கள் பல அழிந்து போயின. ஆனால் மரங்கள் மிகப் பெரும் சோலையாக வளர்ந்து காட்சி அளிக்கின்றன. அங்குள்ள தென்னை மரங்கள் விரைவில் காய்க்கும் என்றும் தென்னந்தோட்ட வருமானத்தை கொண்டே கனிஸ்ர இறையியற் கல்லூரியை நடத்தலாம் என்று மிகுந்த உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

சலோம் நகரிலிருந்து கிளிநொச்சி நோக்கி வான் புறப்பட்டது பாதை மிகவும் மோசமாக இருந்தது. வண. அனுகூலன் ஒவ்வொரு இடத்தை சுட்டிக்காட்டி அதிலே ஒரு முறை இன்னார் விழுந்தார். அதிலே ஒரு முறை இன்னார் விழுந்தார். என சொல்லிக் கொண்டே வந்தார். மாவீரர் துயிலும் இடத்தைத் தாண்டி கிளிநொச்சியை வந்தடைந்தோம். கிளிநொச்சியில் ஜன நடமாட்டமேயில்லை. கடைகள் இருந்த இடத்தில் மரங்களும் கொடிகளும் ஒன்றாக வளர்ந்திருந்தன. நமது தேவாலயத்தை, சூழ காடு வளர்ந்திருந்தது. மெதுவாக தேவாலய வளவிற்குள் நடந்து சென்றோம், உடைகள் எல்லாம் நாயுருவி முட்கள் குத்திக் கொண்டன சிலர் ஆவலேபடு துப்பாக்கி சன்னங்களைச் சேகரித்தனர். சிலர் செல்லின் பகுதிகளை எடுத்தனர். விரைவிலே கிளிநொச்சி தேவாலயமும் குரு மனையும் திருத்தியமைக்க வேண்டுமென்ற முடிவுடன் அங்கிருந்து வெளியேறினோம்.

அதற்குப் பின்னர் கனகாம்பிகைக்குளத்திற்கு போக வேண்டும் ஆனால் கனகாம்பிகைக் குளத்தை கண்டு பிடிக்க முடியவில்லை. அது எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டது. மாமா வட்டக்கச்சியை நோக்கி வாகனத்தை செலுத்தினார். அங்கு பகற் பராமரிப்பு நிலையத்தில் மதியபோசனம் வழங்கப்பட்டது. அங்கு ஆசிரியையாக இருப்பவரின் சகோதரி வண. ஜோன் செல்வத்தை திருமணம் செய்ய இருக்கின்றார். இதனாலேயே மிகவும் சிறப்பாக எங்கள் எல்லோருக்கும் வரவேற்பு அளித்தனர்.

பி ப 3 00 மணிக்கு விசுவமடு ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனை என்று சென்னார்கள் ஆனால் 4 00 மணிக்குத்தான் அவ்விடத்தை சென்றடைந்தோம். விசுவமடு ஆலயத்தில் பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர். நவஜீவன குடும்பத்தார் டாக்டர் ஜீவரத்தினம் குடும்பத்தார். ஆகியோரைக் கண்டதும் எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. சபை ஊழியன் வண, போல் சுரேஸ் 26 பேரை திடப்படுத்தல் பெறுவதற்கு ஆயத்தம் செய்திருந்தார் அப்பிள்ளைகளில் சிலர் சுதந்திரபுரம் திருச்சபையை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப் பட்டது. இந்த வழிபாட்டினை. சேகரகுரு வண. பீ எஸ் மதியாபரணம் நடாத்தினார். அவரே ஆபேட்சகர்களை அத்தியட்சர் முன் நிறுத்தினார்.

வழிபாடு முடிந்த பின்னர் ஒரு பகிரங்க கூட்டம் நடைபெற்றது. அதில் செயளாலர் திரு. எட்வேட் பேசினார். சிறப்பான ஓர் தேனீர் விருந்தினை விசுவமடு திருச்சபையார் ஒழுங்கு செய்திருந்தனர். விசுவமடுவில் இருந்து வன்னேரிக்குளம் வந்து சேர இரவு 10 00 மணி ஆகி விட்டது விரைவில் தூங்குங்கள் நாளைக்கு உங்களுக்கு அதிக வேலை இருக்கிறது என்றார் திரு. எஸ். இரத்தினவேல்

## நன்றி செலுத்தும் வழிபாடு

கிறிஸ்துவின் திருப்பணியின் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருட்திரு டீ. ஆர். அம்பலவாணர் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருட்திரு. வீ என். தர்மகுலசிங்கம் ஆகியோரின் திருப்பணிக்கு நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு 01 - 05 - 2000 அன்று ஆசிரம செபாலயத்தில் நடைபெற்றது. அருட்திரு S. C. ஆனல்ட், அருட்திரு V. ராஜ்குமார், சேவக பிலிப்குமார், அருட்திரு D. C ரட்ணசிங்கம், ஆகியோர் வழிபாட்டை நடாத்தினர். அருளுரையை அருட்திரு V. ராஜ்குமார் ஆற்றினார். அருட்திரு D. C. ரட்ணசிங்கம் நன்றி செலுத்தும் உரையை பாடலுடன் சேர்த்து வழங்கினார்.

வழிபாட்டின் பின்னர் பெரியண்ணன் மண்டபத்தில் திரு.C பவிங் தலைமையில், சிறப்புக் கூட்டம் நடைபெற்றது: திரு: செல்வந்தா அருட்திரு டீ. ஆர். அம்பலவாணர் பற்றி வாழ்த்துபா வாசித்தார். இருவருக்கும் புலர் மாலை அணிவித்து கௌரவித்தனர். பரிசில்களை இருவருக்கும் திரு. C பவிங் வழங்கினார். இருவரும் பதிலுரை வழங்கினார்கள். கூட்டம் இனிதே டீ. ஆர். அம்பலவாணரின் ஜெபத்துடன் இனிதே முடிவுற்றது.

UNIVERSITY OF JAFFNA LIBRARY AUG 2000 PERIODICALS



## We are Sorry

The incidents that took place at Ward Place on Thursday the 6th April 2000 were nauseating and shameful.

Some Sri Lankans demonstrated in front of the Norwegian Embassy, burnt the National Flag of Norway and shouted slogans against that country's peace initiative in Sri lanka.

At the public meeting that followed, the leaders of the movement said "Norway is a Christian country; they have given refuge to Tamil Militants and encouraged their terrorist activities; Norway should not interfere in Sri Lankan ethnic problems".

This only shows how deep the communal feelings have gone into the minds of our people. Is the nation divided beyond repair?

Norway is a Scandinavian country, Scandinavian countries have no Colonial past. At no time did they annex Afro - Asian countries and exploit them.

They were also greatly concerned about human rights Violations and minority safeguards in the Third World Counties.

No doubt most of the inhabitants are Christians and adherents of the theology of Ulrich Zwingle, where literacy is 100%. In 1999 Norway occupied rank 2 in the UNDP list of 174 countries of the world.

We are sad and feel ashamed about the whole incident. Whe ther it was done by a small group or people of a particular religion of the entire nation does not matter We are all citizens of Sri Lanka. Any shameful act by any Sri Lankan outfit effects all of us We know the agony and hardship Sinhalese and Tamils underwent in India after the assasination in May 1990.

Lack of civilities will make European Nations think poorly about our civilization and culture.

It's heartening to note that Norway will continue its role as facilitator undaunted by the irritation,

As Sri Lankan citizens, we tender our apologies to the government and the great people of Norway.

## Rev. S. M. Jacob..


1975 - 1981: He was a Circuit Minister in Hammersmith Brenford and Hounslow till 1981 before he tenmed Sri Lanka. A man of vision and commitment dedicated to place the interest of the Church above his personal interests, and claims of friendship class or race, he was respected wherever he served

It was during this stay in London that he understood the needs of a small Tamil Christian congregation originally from Sri Lanka, which since 1972 was striving to create a worshipping Tamil community in London We were longing for fellowship, warman and pastoral care. He offered us his service as Honorary Minister. We became the London Tamil Christian Congregation (L T C C) at Putney. As more refugees started coming after 1977, many smaller worshipping groups sprang up in and around London. He always encouraged us to be inclusive and supportive of all such groups. Many of us in this congregarlon were accustomed to the C S I tradition in Sri Lanka. We also have members from Anglican, Methodist and Baptist beckgrounds too. In a sense we had startep an Ecumenical congregation by encouraging our members to attend their local churches on the other three Sundays when we did not have a Tamil service. Rev Jacob was greatly appreciated for his pastoral care and his encouragement of our vision as world citizens getting us involved with the World Church activities here in U. K. There was an ari of Christian solidarity and a sense of beionging to the one world church as a congregation: He helped us to develop a stucture as a congregation, drew up a Constitution, with an Administrative and Executive Council of lay members.

Despite his declining health he would continue to do as much as possible for the Methodist Church and the LTCC. We were indeed very blessed to have had in him a caring disciplined, concerned, providing and foresignted Minister who trained us to be disciplined, searching and honest with ourselves We thank God for this loyal and faithful follower of Jesus Christ who taught us the faith and by example showed us the need to be faithful to a higher calling and service in our time. He succumbed to his failing health, which caused a fracture of his thighbone in January. He accepted his death with calm courage and dignity. He died peacefully on 27th February 2000, at the Middlesex Hospital, London surrounded by his family in prayer around him. A well attended service of Thanksgiving before, and a Fellowship meal after his committal rites at St. Marylebourne's Cemetery, was held at Wesley Chapel in London on the 6th March 2000.

Chandra Sethurajan.
(London Tamil Christian Congregation)

## 1st DEATH ANNIVERSARY



*In Loving Memory of*

**Mrs. Victoria Nallammah Rajaratnam**

**Born:** **14th May 1909**
**Entered Glory:** **6th May 1999**

Inserted by her Loving Children in low, Grand Children Great Grand Children

*R. Rajendra*
*308, College Lane*
*Vaddukoddai.*

## Golden & Silver Jubilee

The Rev. D. R. Ambalavanar and The Rev. V. N. Tharmakulasingam celebrated Golden and Silver Jubilee of ministry respectively.

A Service of thanksgiving for their ministry was held at the Asram chapel on May 1st The Rev. S. C. Arnold conducted the Service assisted by Philip annan. The Rev D. C. Ratnasingam paid a tribute and the Rev V. Rajkumar preached the sermon.

The Service of thanksgiving was followed by Holy Eucharistic service. A public function followed in the Periannan Hall. Mr C. B Bavinc, Deputy Principal of Christian. Theological Seminary gave a brief accout of the ministry of Revds Ambalavanar & Tharmakulasingam. He also gave presentation to the jubilarians The jubilarians then thanked all those present and gave glimpses of their experience as ministers

All those presnt participated at a fellowship breakfast where konji was served.

## OBITUARY

### Mrs. Jeyamany Jeyaratnam

The death occurred on 31st January of Mrs. Jeyamany Jeyaratnam (86) nee Suppiah, formerly of Fussels Lane, Wellawatta; widow of late willie Jeyaratnam; mother of Indranee Thambythurai (Australia) Jeyaranee Dharmarajah (Canada) and late Ranji; Grand mother of Meena, Geetha, Niranjan, Roshan and Nishanthi. She is the sister of late Daisy Barr Kumarakulasighe late Ponmany Rajasekeram, late Arthur Ariaratnam, late Ratnam Chinniah, Arassaratnam (India) & Pushparanee Jeyanathan (U S A).

She was an active member of the Colombo C. S. I. Church. The funeral service took place in Toronto, Canada on 5th February 2000; conducted by Rev. Isaac Selvaratnam and the remains were cremated.

### Grace Thevarasi Paul

The Death occurred on 20th April in Scarborough Canada of Mrs. Grace Thevarasi Paul, daughter of Late Mr. & Mrs Thevathasan of Earlalai North, beloved wife of Chella (J. S. Paul), mother of Dilogini and Jerald, sister of Mrs Thevapushpam Tharmakulasingam, Thevanatkarunai (Canada), Thevachandran (Canada) Mrs. Thevathyanithi Atputharajah (Canada) and Thevathayalan (Germany).

Funeral took place in Scarborough on 24th April. A Service of thanksgiving was held at Earlalai North, Church. The Service was conducted by the Rev. Milton Soloman assited by the Rev. T. E. Asokumar and Rev. Jerom Paul Scripture Lesson was read by Mrs. Sugirtham Thayananthan, tribute was hard by the Rev. V. N. Tharmakulasingam Rev. A. A. Paul preached the sermon Rev. D. R. Ambalavanar bid the final prayer and pronounced the benediction.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka: News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 05th April 2000 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.